புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# பழந்தமிழர் விளையாட்டுகளில் ஏறுதழுவுதல்

**ஆய்வாளர்**
**ஜெ.பிரகதீஸ்வரன்**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

**நெறியாளர்**
**முனைவர் க.செல்வராஜ்**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் 637 401.

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய பழந்தமிழர்கள் எப்போதும் சோர்வின்றி வாழ்வதற்காகவும் பொழுதுபோக்குவதற்காகவும் பல நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துள்ளனர். அதில் விளையாட்டுக்களை தனிக்கலையாகக் கொண்டு வளர்த்து வந்துள்ளனர். எப்பொழுதும் உடல் நலமாகவும் வலுவாகவும் நோய்த்தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாக்கவும் விளையாட்டையே பெரிதும் கையாண்டுள்ளனர். பெரும்பாலும் மனதால் விரும்பிய விளையாட்டையே விளையாடி மகிழ்ந்தனர். அவ்வாறு மனதால் விரும்பி ஆடிய விளையாட்டுக்கள், சங்க இலக்கியங்களில் பல பாடல்களில் அமைந்துள்ளன. இதில் ஏறுதழுவுதல் எனும் வீர விளையாட்டு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இவ்விளையாட்டு இன்றுவரை தொன்றுதொட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. தமிழரின் வீரத்தைப் பறைசாற்றும் விளையாட்டாகவும் திகழ்கிறது. அதே சமயம் ஏறுதழுவுதல் பண்டைய வீரமுள்ள ஆண் மகனுக்கான மண வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கும் வகிக்கிறது. ஆகவே பழந்தமிரின் வீர விளையாட்டு ஏறுதழுவுதலை ஆராயும் பொருட்டு இக்கட்டுரையில், ஏறுதழுவுதல் குறித்த தொல்சான்று, சிலப்பதிகாரம் கூறும் ஏறுதழுவுதல், கலித்தொகையில் ஏறுதழுவுதல் விழா, தலைவனின் வீரம், காளைகளின் வீரம், வீரச்செயல், கூத்துவழி ஏறுதழுவுதல் குறித்த வரையறைகள் மற்றும் தற்கால ஏறுதழுவுதல் எனப் பகுத்து ஆராயப்பட்டுள்ளன.

**ஆய்வு நெறிமுறைகள்**

இவ்வாய்வில் சங்கப் பாடல்களை விளக்கி ஆராய்வதால் விளக்குமுறை அணுமுறையாலும் அவற்றைப் பகுத்து ஆராய்வதால் பகுப்புமுறை அணுகுமுறையாலும் ஆய்வு அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

### முன்னுரை

உலகில் உள்ள மூத்த மொழிகளில் தொடர்ச்சியான வரலாற்றுக் கொண்ட மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. இம்மொழி பேசும் தமிழினம் உயர்ந்த பண்பாடு நாகரிகத்தைத் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வாறான, பழமையான பண்பாட்டை உலகறிவதற்குப் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்கள் துணை புரிகின்றன. ஒவ்வொரு சங்கப் பாட்டும் ஒவ்வொரு பண்பாட்டைப் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. பண்பாடு என்பது தொழில், உணவு, விழா, விளையாட்டு, இசை, நாடகம், கூத்து, காதல் போன்றவற்றைக் குறிக்கும். இதில் விளையாட்டுக்கள்வழி பழந்தமிழரின் பண்பாடுகள் வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. உதாரணமாக, தங்களின் திருமணங்களை விளையாட்டுகளின் வழியே நடத்தினர். அதில் முக்கியானது ஏறுதழுவி திருமணம் செய்து கொள்ளும் முறை. முல்லை நில மக்கள் தங்களின் திருமண முறையை ஏறுதழுவுதல் எனும் விளையாட்டின் மூலம் நடத்தினர். ஏறுதழுவி வெற்றி பெறும் ஆடவனுக்கே பெண்ணை கொடுப்போம் என்று சில வரையறைகளையும் வகுத்திருந்தனர். இன்றும் தொன்று தொட்டு வரும் வீர விளையாட்டுகளில் ஏறுதழுவுதலும் ஒன்று. ஆகவே, ஏறுதழுவுதல் எனும் பழந்தமிழர் விளையாட்டைப் பற்றி அறிந்து கொள்ளும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

### ஏறுதழுவுதல் பெயர்க்காரணம்

ஏறுதழுவுதல் எனும் சொல்லைப் பகுக்கும்போது ஏறு + தழுவு எனப் பிரிகிறது. ஏறைப் பிடித்து, அதன் திமிலைத் தழுவுவதால் ஏறுதழுவுதல் என்றாகிறது. இன்றைய காலகட்டத்தில் சல்லிக்கட்டு என்ற பெயரில் ஏறுதழுவுதல் நிகழ்கிறது. சங்க காலத்திற்குப் பிறகு தமிழில் வடமொழி மெல்ல நுழைந்தது. தமிழ்ச் சொற்களில் வடமொழி கலந்து வடமொழிச் சொற்களாகவே மாறியது. இதனால் தமிழ்ச்சொற்கள் குன்றியது. தமிழும் வடமொழியும் கலந்து எழுதும் வடிவத்திற்கு மணிப்பிரவாள நடை என்று பெயரிட்டனர். அப்படி மணிபிரவாள நடையில் மாறிய சொல்லாக சல்லிக்கட்டு என்ற சொல்லும் இருந்திருக்கலாம். அதைப் பிரித்துப் பார்க்கின்ற போது, சல்லி என்றால் காசு. காசை ஒரு துண்டில் முடித்து காளைக் கொம்புக்கிடையே கட்டுவது, சல்லிக்கட்டு என்றாகியது. 'ச' என்ற எழுத்து 'ஜ' என்ற வடமொழி எழுத்தாகி ஜல்லிக்கட்டு என்று புணர்ந்தது. ஆகவே இன்றைய காலத்தில் ஏறுதழுவுதல், சல்லிக்கட்டு என்னும் பெயரில் பொங்கல் விழா அன்று நடந்து வருகின்றது.

### ஏறுதழுவுதல் தொல்சான்று

உலக பழமையான நாகரீகங்களில் சிந்துசமவெளி நாகரீகமும் ஒன்று. சிந்துசமவெளி நாகரீக அகழாய்வின்போது ஏறுதழுவுதலுக்கான கல் சான்று கிடைத்துள்ளது. இதை, **"சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் 'கல் முத்திரை' ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார். 'சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்டது. 'எருது பொருதார்கல்' ஒன்று உள்ளது கோவுரிச் சங்கன் கருவந்துறையிலே எருது விளையாடிப் பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்டகல்லு' கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவது போன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகிறது. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ளது. தேனி மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவில் என்ற இடத்தில்**

***திமிலுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது"*** [1] *என்று ஒன்பதாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.*

*மேற்கண்ட கருத்துக்களின்படி சிந்துவெளி நாகரீகமானது கி.மு. இரண்டாயிரம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது கருத்து. இதன் மூலம் ஏறுதழுவுதல் கி.மு. இரண்டாயிரம்; ஆண்டு பழமையானது என்று குறிப்பிடலாம். மேலும் ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக வருவதற்கு முன் நம் பழந்தமிழர்களின் பண்பாடு சிந்துசமவெளி பகுதி வரை பரவியிருந்தது என்பதை அறிய முடிகிறது.*

*ஆரியர்கள் வருவதற்கு முன் வடபகுதியில் பேசி வந்த மொழி பழந்திராவிடம் மொழி என்பது குறிப்பிடத்தக்கது. பழந்திராவிடம் மொழி என்பது பழந்தமிழ் மொழியாகும். மொழி இருக்கும் இடமெல்லாம் அம்மொழி பேசும் மக்கள் இருப்பார்கள் என்பது கருத்து. நம் பழந்தமிழ் மொழி வடபகுதி வரை பரவியிருந்ததால் அங்குப் பழந்தமிழர் வாழ்ந்திருக்கலாம். அவர்கள் ஏறுதழுவுதல் விளையாடி இருக்கலாம். அதற்கான சான்று தான் சிந்துசமவெளி அகழாய்வின்போது கிடைத்திருக்கக்கூடும் என்று கருதவும் இடமுண்டு.*

*இதன் வாயிலாக ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் சேலம் மாவட்டத்தில் ஒரு நடுகல் கிடைத்திருப்பதை அறிய முடிகிறது. இந்த நடுகல்லில் கருவந்துறை என்னும் ஊரைச் சார்ந்த சங்கன் என்பவன் எருது விளையாடி இறந்ததற்காக நடப்பட்டது என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது சேலம் பகுதியில் ஏறுதழுவுதல் நடத்தியதற்கானச் சான்று கிடைத்துள்ளதை அறிய முடிகிறது. மேலும், நீலகிரி கோத்தகிரி அருகே கரிக்கையூர் என்னுமிடத்தில் ஒரு காளையின் ஓவியம் கிடைத்திருப்பதை அறிய முடிகிறது. இந்த ஓவியம் மூன்று காளைகளை பலரும் கூடி நின்று விரட்டுவது போல் அமைந்திருக்கிறது. மதுரை உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் திமிலுடைய காளையை ஒருவன் அடக்கச் செல்வது போல் ஓர் ஓவியம் கிடைத்திருப்பதை அறிய முடிகிறது. திமிலுடன் இருக்கும் காளை ஓவியம் தேனி மாவட்டம் மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவில் கிடைத்திருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.*

*நம் பழந்தமிழர்களின் பண்பாட்டுக்குப் பறைசாற்றும் சான்றுகளாக ஏறுதழுவுதல் குறித்த தொல்சான்றுகள் இருக்கின்றன என்பது நோக்கத்தக்கது.*

***சிலப்பதிகாரத்தில் ஏறுதழுவுதல்***

*சங்ககாலத்தில் தோன்றிய சிலப்பதிகாரம், கலித்தொகை ஆகிய இரு இலக்கியங்களின் வழி ஏறுதழுவுதலைப் பற்றி முழுமையாக அறிய முடிகிறது. கலித்தொகை காலத்தால் பிந்திய நூல் என்கின்றனர். அதனால் சிலப்பதிகாரம் ஏறுதழுவுதல் பற்றி குறிப்பிடும் முதல் நூலாகத் திகழ்கிறது. பழந்தமிழ் கூறும் நல்லுலகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதால் இப்பேரிலக்கியத்தைத் தமிழ் தேசிய காப்பியம் என்று சான்றோர்களால் அழைக்கப்படுகின்றனர். இளங்கோவடிகள், முப்பெரும் நாட்டு மக்களின் பண்பாட்டை ஓர் இலக்கியத்திலேயே படைத்துள்ளார். இதனால் புறநானூற்றுக்கு அடுத்துப் பழந்தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகம் என்று சிலப்பதிகாரத்தைக் கூறலாம்.*

*இக்காளையைத் தழுவுபவருக்கு இப்பெண்ணை மணக்கலாம் என்று ஏறுதழுவுதல் விழா எடுத்து அறிவித்துள்ளனர். காளையை அடக்குபவர் காணும் விதமாக அப்பெண்களைப் பரணில் அமர்த்தியுள்ளனர். இதனை,*

***"காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறம்இவ***

***வேரி மலர்க்கோதை யாள்***

**....................................**

***தூநிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள் இப்***

**பூவைப் புதுமல ராள்"[2]**

என்ற பாடல் வரிகளின் மூலம் இன்ன பெண்ணிற்கு இன்ன காளை என்று பண்டைய தமிழர்களின் திருமண முறையை ஏறுதழுவுதல் வழி அறிய முடிகிறது.

**கலித்தொகையில் ஏறுதழுவுதல்**

கலித்தொகையில், ஏறுதழுவுதல் விழா, தலைவன் வீரம், காளைகளின் வீரம், சிறுதெய்வ வழிபாடு, கூத்துவழி ஏறுதழுவுதல், மற்ற வீரர்களின் செயல் ஆகியவை வெளிப்படுகின்றன.

**ஏறுதழுவும் விழா**

ஏறுதழுவுதல் என்பது பல விளையாட்டுகளில் ஒன்று என எண்ணப்பட்டு வருகிறது. ஆனால் பழந்தமிழர் ஏறுதழுவுதலை விழாவாகக் கொண்டாடியுள்ளனர். தலைவன். தலைவியை மணந்து கொள்கிறேன் எனக் கூறியவுடன், தலைவியின் சுற்றத்தார்கள் காலம் தாழ்த்தாமல், ஏறுதழுவுதல் விழா நடத்துவதற்கு ஊர் முழுக்கப் பறையடித்து அறிவிப்பீர் என்று பணியாளரிடம் கூறுகிறார்கள். இவ்விழாவின் போது, இன்ன காளையில் இன்ன பெண்கள் என்று அப்பெண்கள் எல்லோரும் பெண்புறாப் போல் பரண்(மேடை) மேல் அமர்ந்து கண்டுகளித்துள்ளனர் என்கிறது கலித்தொகை. இதனை,

**"சொல்லுக' 'பாணியேம்' என்றார் 'அறைக' என்றார், பாரித்தார்**

**மாணிழை ஆறாகச் சாறு.**

**சாற்றுள் பெடையன்னார் கண்பூத்து, நோக்குவாயெல்லாம்**

**மிடைபெறின், நேராத் தகைத்து"[3]**

என்ற பாடல் வரிகளின் மூலம் ஏறுதழுவும் விளையாட்டைப் பழந்தமிழர்கள் விழாவாக எடுத்துச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

சங்க காலத்தில் ஏறுதழுவும் விழா எடுக்கும் போது, பறையடித்து ஊர் மக்களுக்குத் தெரிவித்துள்ளனர். அப்பண்பாடு இன்றும் அழியாமல் ஊர்ப்பகுதியில் அதே போன்று பறையடித்து மக்களை அழைப்பார்கள் என்பர். மேலும் மக்கள் அனைவரும் ஏறுதழுவும் விழாவைக் கண்டுகளிப்பர். எனவே ஏறுதழுவுதல் விழா தமிழர் பண்பாட்டின் அடையாளமாக இன்றும் திகழ்ந்து வருகிறது.

**தலைவனின் வீரம்**

தமிழரின் வீரப் பண்பாட்டுக்கு அடையாளமே ஏறுதழுவுதல். ஏறுதழுவுதலில் வீரமானது தலைவனிடமும் காளைகளிடமும் மற்ற வீரர்களிடமும் இருப்பதாகக் கலித்தொகைக் காட்டுகின்றது. முல்லைக்கலியில் போரில் வல்ல காளையை அடக்கிய தலைவனின் வீரம் வெளிப்படுகிறது. தோழி, தலைவனிடம் மதநீர் வழியும் யானையை விட அஞ்சாமல் இருக்கும் காளையைத் தழுவி வெற்றி பெறுவதன் மூலம் ஆயமகள் தோளின் உரிமையைப் பெறுவாய். இதனை,

**"அணிமாலைக் கோள்வன் தரூஉமார், ஆயர்**

**முணிமாலை ஊதும் குழல்**

**..............................**

**ஈன்றன், ஆயமகள் தோள்"[4]**

என்ற கலித்தொகைப் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது. அடியொட்டி எழுதிய,

*"உன் மாமன் பொண்ண நெனச்சி*

*நீ மாட்ட கட்டிப் புடிடா*

*நீ ஜெயிச்சிக் காமிச்சா*

*கழுத்த நீட்டுவா"*[5]

*என்ற வைரமுத்து பாடல் வரிகள் நினைவு கூறத்தக்கது. இப்பாடலின் வழியாகத் திருமண செய்து கொள்ளும் பெண்ணிற்காகக் காளையை அடக்க வேண்டும் எனக் கூறுவதை அறிய முடிகிறது. ஆகவே மனதால் விரும்பிய பெண்ணை மணக்க வேண்டுமென்றால் ஏறுதழுவ வேண்டும் என்ற பழந்தமிழர் பண்பாட்டு விளையாட்டின்வழி புலப்படுத்துவதை அறிய முடிகிறது. இதில் தமிழர் திருமண முறையைப் பற்றிக் குறிப்பிடுவதையும் அறிய முடிகிறது.*

*தலைவன், தலைவியை மணப்பதற்காக, மாலை அணிந்து, பெரிய கரிய கைகளால் போர்வல்ல சிறந்த காளையின் திமிலைத் தழுவுவதற்காக, திமில் மீதேறிப் போரிட்டான். பின் அவனுடைய வலிமையால் போரில் வல்ல சிறந்த காளையை அடக்கினான். இதை,*

**"அவருள்மலர் மலிபுகழ்ஏல அலர்மலி மணிபுரை நிமிர்தோள் பிணைஇ**

**எருத்தோடு அமிலிடைத் தோன்றினன்:"**[6]

*எனக் கலித்தொகை கூறுகிறது. போரில் வல்ல சிறந்த காளை என்பது சாதாரணக் காளையை விட, பல மடங்கு வலிமையுள்ளதாகும். அக்காளையை அடக்கி தலைவன் தன் வீரத்தை வெளிப்படுத்துவான்.*

**சிறுதெய்வ வழிபாடு**

*ஏறுதழுவுதலின் போது, ஆயமகன்கள், காளைகளை அடக்குவதற்காக ஆலமரம், மாமரம் நிழலில் உள்ள கடவுளை வணங்கி களத்திற்கு வந்தனர். இதனை,*

**"...............................................இயைபுடன் ஒருங்கு**

**................................................**

**துறையும் ஆலமும், தொல்வலி மராஅமும்**

**முறையுளி பராஅய், பாய்த்தனர், தொழூஉ."**[7]

*எனக் கலித்தொகைப் பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. கடவுளை வணங்கும் முறை இன்றும் அழியாமல் நம் பண்பாட்டில் வழக்கில் இருந்து வருகிறது. பொதுவாகவே மக்கள் கடவுளை வணங்குவது நம் பண்பாட்டில் ஒன்றாகத் திகழ்கிறது. மேற்கண்ட பாடல் வரிகளை வைத்துப் பார்க்கின்ற போது சிறுதெய்வ வழிபாட்டு முறை பண்டைய காலத்தில் இருந்து தொன்று தொட்டு வந்ததைக் காண முடிகிறது. மேலும் சிறுதெய்வ வழிபாடு குறித்து ஏறுதழுவுதல் எனும் பழந்தமிழர் விளையாட்டின்வழி அறிய முடிகிறது.*

***வீரச் செயல்***

*ஏறுதழுவுதலின் போது காளை தன்னோடு போரிட்டவனின் வயிற்றைத் தன் கொம்பால் கிழித்து, குடலைக் கொம்பில் சுற்றிக் கொண்டுள்ளது. ஆயமகன், அந்தக் கொம்பில் சுற்றியுள்ள தன் குடலை எடுத்து மீண்டும் தன் வயிற்றில் வைத்துக் கொள்கிறான். இதை,*

**"கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த ஏற்றின்முன்**

**ஆடி நின்று, அக்குடர் வாங்குவான் பீடுகாண்"[8]**

என்ற முல்லைக்கலி பாடல் வரிகளின் வாயிலாக அறிய முடிகிறது. காளையின் கொம்பில் இருந்த குடலை எடுத்து வீரன் ஒருவன் தன்வயிற்றில் இட்டுக் கொள்ளும் ஆயமகனின் உணர்ச்சிமிக்க செயல் அவனின் பெருமிதத்தைக் காட்டுவதாக அமைகிறது. காளைகளுடன் போரிட்டு இறந்துபோனாலும், அவன் வீரனாவான் என்றும், காளைக்கு அஞ்சுபவனை வீரனாகக் கருதமாட்டார்கள் என்றும் பழந்தமிழர் பண்பாட்டை விளையாட்டுவழி உணர்த்துவதாக முல்லைக்கலி திகழ்கிறது.

**காளைகளின் வீரம்**

போர்க்களத்தில் காளைகள் ஆயமகன்களைத் தாக்கியது பற்றியும், காளைகளுக்குக் தந்த உவமைகளைப் பற்றியும் முல்லைக்கலியில் ஒரு சில பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அதில் பட்டுப்பூச்சி போல் சாம்பல் நிறமுள்ள காளை தன்மீது பாய்ந்த ஒருவனை இறக்கும்வரை அவனைத் தாக்கியிருக்கிறது. நெற்றிச் சந்திரனின் சுழியைப் போல் கருநிறமுள்ள காளை ஒருவனின் குடல் வெளிவருமாறு குத்தி குலைத்துள்ளது. செம்புள்ளிக் காதினையுடைய வெள்ளை நிறக் காளைத் தன் கொம்பின் முனையால் ஆயமகனைக் குத்தியது என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதைப் பற்றி,

**"மேற்பாட்டு உலண்டின் நிறன் ஒக்கும் புன்குருக்கன்**

**..................................................**

**நெஞ்சம் பிளந்திட்டு, நேரார் நடுவண், தன்**

**வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்."[9]**

என்ற முல்லைக்கலி பாடல் வரிகளின் மூலம் சாம்பல் நிறக்காளை, கருநிறக் காளை, வெள்ளைக் காளை ஆகிய மூன்று காளைகளும், ஆயமகன்களை இறக்கும் வரையிலும், குடல் வெளியேறும் வரையிலும், கொம்பின் முனையாலும் தாக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. காளைகளின் வீரத்தைக் காட்டுவதற்காகவே முல்லைக்கலியில் இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.

ஆகவே ஏறுதழுவுதலில் காளைகளின் வீரம் குறித்து முல்லைக்கலி பாடல் வரிகள் உணர்த்துவதை அறிய முடிகிறது. இதன் மூலம் பண்டைய காலம் முதல் இன்றைய காலம் வரை காளைகளின் வீரத்தையும் அதனைத் தழுவும் வீரர்களின் வீரத்தையும் ஏறுதழுவுதல் எனும் நிகழ்ச்சி நமக்குச் சுட்டிச் செல்கிறது.

**இன்ன காளைக்கு இன்ன பெண் முறை**

முல்லை நிலத்து மக்கள் தங்களுக்கு பெண் குழந்தைப் பிறந்தால், அக்குழந்தையை வளர்க்கும் போதிலே ஆண் கன்றையும் வளர்ப்பர். அப்பெண் பெரியவளாக ஆன பின்பு, அந்தப் பெண்ணோடு வளர்த்த அந்தக் காளையை போரிட்டு அடக்குகிறார்களோ அவருக்கே அப்பெண்ணைத் திருமண செய்து கொடுப்பர் எனும் பழக்கம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

வெள்ளை நிறக் காளையை அடக்குபவன், பல் வரிசையுள்ள இப்பெண்ணைப் மணப்பான். கருநிறக் காளையை அடக்குபவன், நீண்ட கூந்தலுள்ள பெண்ணுடன் துயிலப் பெறுவான். காளையைக் கொள்பவனுக்கு, பெண் மான் போல் பயந்து பார்க்கின்ற பெண்ணை மணக்கலாம். செவலைக் காளையைப் பிடிப்பவனுக்கு, குழை அணிந்த காதினை கொண்ட மூங்கில் போன்ற தோளையுடைய பெண்ணைத் துயிலப் பெறுவான் என்று அறிவித்து, அப்பெண்களைப் பரண் மேல் வரிசையாக நிறுத்தினர். இதைப் பற்றி,

***"பெருவரும் பண்பி னவ்வையும், பிறவும்***

***உருவப்பல் கொண்மூக் குழீஇவை***

***புரிபுரிபு புகுத்தனர், தொழூஉ.***

………………………………

***குரூஉக்கண் கொலையேறு கொள்வான் - வரிக்குழை***

***வேய்உறழ்மென் தோள் துயில்பெறும், வெந்துப்பின்***

***சேய்எய் சினன் அஞ்சான் சார்பவன் என்றாங்கு***

***அறைவனர், நல்லாரை, ஆயர் முறையினால்,***

***நாள்மீன் வாய்சூழ்ந்த மதிபோல், மிடைமிசைப்***

***பேணி நிறுத்தர் அணி"***[10]

*என்னும் பாடல் மூலம் ஏறுதழுவுதல் என்பது வீரத்தையும் அதே சமயம் பண்டைய வீரமுள்ள ஆண் மகனுக்கான மண வாழ்க்கையைத் தீர்மானிப்பதையும் உணர்த்துகிறது. இதிலிருந்து பண்டைய பழந்தமிழர் திருமண முறையை ஏறுதழுவுலும் முடிவு செய்கிறது என்பதை அறிய முடிகிறது.*

**கூத்துவழி ஏறுதழுவுதல்**

*தோழி தலைவியிடம், பொது மன்றத்தில் குரவைக் கூத்து நடந்ததைக் கூறுகிறாள். கொல்கின்ற காளைக்கு அஞ்சும் ஆயமகனை, ஆயமகள் தன் கணவனாக விரும்பமாட்டாள் எப்போதும் வெறுப்பாள். ஏறுதழுவி, ஆயமகன் இறந்தாலும், அவனைக் கண்டு மனம் வருத்தப்படமாட்டாள். ஏறுதழுவி காளையை அடக்குபவனைத் தவிர, வேறு எவருக்கும் தன் தோளைத் தழுவிக் கொள்ள இடம் தரமாட்டாள். காளையின் கொம்புகளுக்கு அஞ்சிக் கொள்ளும் கோழைக்கு ஆயமகளின் தோளைத் தீண்ட, ஆயமகளின் தோள் என்ன அவ்வளவு எளிதானதா? கொல்லும் காளையின் கொம்புகளுக்கு இடையே, தான் மணந்து கொள்ளும் மாதரின் மார்பை நினைத்துப் பாய்வான். அவனிடம், ஆயமகளை விலை பேச வேண்டாம். ஆயர்கள் தம் மரபினைப் பாடியும், கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தை ஆளும் பாண்டிய மன்னரை வாழ்த்தியும், திருமாலைப் போற்றியும் குரவையாடினர். இதை.*

***"மாதர் மகளிரும் மைந்தரும் மைந்துற்றத்***

***தாதெரு மன்றத்து அயர்வர், தழூஉ.***

***கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்***

***புல்லாளே, ஆயமகள்.***

***அஞ்சார் கொல்லேறு கொள்பவர் அல்லதை,***

***நெஞ்சிலார் தோய்தற்கு அரிய – உயிர்துறந்து-***

……………………………………………

***மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னிலம்***

***ஆளும் கிழமையோடு புணர்ந்த***

***எங்கோ வாழியர், இம் மலர்தலை உலகே!"***[11]

*என்ற கலித்தொகைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இளைஞன் தோற்றுவிட்டால் ஆயமகள் அவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ளமாட்டாள் என்று கூறுவதிலிருந்து பழந்தமிழர்கள் வீரத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதை நம்மால் உணர முடிகிறது.*

***இன்றைய ஏறுதழுவுதல்***

*தமிழர் பண்பாடுகளில் பல அழிந்துள்ளன. அதில் அழியாமல் இருக்கும் பண்பாடுகளில் ஏறுதழுவுதலும் ஒன்று. வீரக்களத்தில் காளைத் தோற்றாலும், இளைஞர் தோற்றாலும், வீரம் தோற்காது என்பது இதன் மூலம் விளக்கும். காளைகள் பொதுவாகவே வீட்டில் இன்னொரு குழந்தையாகவே வளர்ந்து வருகிறது என்பதை,*

***"சல்லிக்கட்டு தமிழர் உச்சம்***

***வீரத்தில் இதுதான் மிச்சம்***

***துளியும் இல்ல நெஞ்சில் அச்சம்***

***உயிரெல்லாம் துச்சம்***

***மாடு சில நேரம் தோற்கலாம்***

***மனுசன் சில நேரம் தோற்கலாம்***

***ஆனால் வீரம் தோற்பதில்லயே***

***போராடி பாரு மச்சான்***

***ஒரு மாடு மோதியே***

***மனுசன் சாவது***

***உண்டு உண்டு***

***அது காளையில்ல***

***அது இன்னொரு புள்ள***

***வந்து தொட்டுப் பாரு உசுரு***

***உன்னது இல்ல"***[12]

*வைரமுத்து ஒரு பாடலாக எழுதியுள்ளார். இன்றைய ஏறுதழுவுதலில் நடக்கும் நிகழ்வுகளை வைரமுத்து சுட்டிக்காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது, மேலும் வீரப் பண்பாட்டில் எஞ்சியுள்ளது ஏறுதழுவுதல் என்று குறிப்பிடுகிறார். மீதமுள்ள பழந்தமிழர் வீரப் பண்பாடு எல்லாம் அழிந்துள்ளன என்று பண்பாட்டின் நிலையைப் பற்றி எடுத்துச் சொல்கிறார். அஃறிணையை நம் வீட்டில் உறவாகப் பார்க்கும் முறை இன்று உள்ளது என்று அவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.இன்றைய ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டு பெயரில் நடந்தாலும், பழங்கால ஏறுதழுவுதலுக்கும் தற்கால ஏறுதழுவுதலுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. பழங்காலத்தில் ஏறுதழுவி வெற்றி பெற்றால் பெண்ணைக் கொடுப்பர். ஆனால் தற்காலத்தில் ஏறுதழுவி வெற்றி பெற்றால் பணமாகவோ, பொருளாகவோ கொடுக்கின்றனர். பழங்கால ஏறுதழுவுதலில் பாதுகாப்பு இல்லாத முறையில் நடத்தப்பட்டன. ஆனால் தற்கால ஏறுதழுவுதலைப் பாதுகாப்புடன் நடத்தி வருகின்றனர்.*

*பழங்கால ஏறுதழுவுதலுக்கும் இன்றைய கால ஏறுதழுவுதலுக்கும் சில ஒற்றுமையும் இருக்கின்றன. பழங்காலத்தில் ஏறுதழுவுதலுக்கு முன்பு கடவுளை வணங்கி களத்தில்*

இறங்கினர். அதே போல் தற்காலத்திலும் ஏறுதழுவுதலின் போது கடவுளை வணங்கி களத்திற்கு வருகின்றனர். பழங்கால ஏறுதழுவுதலில் வெற்றி பெற்ற வீரனை ஊர் மக்கள் பாராட்டுகின்றனர். அதே போல் தற்கால ஏறுதழுவுதலில் வெற்றி பெற்றவருக்கு ஊர் மக்கள் பாராட்டுகின்றனர். ஆகவே, ஏறுதழுவுதலில் பழங்காலத்திற்கும் தற்காலத்திற்கும் ஒற்றுமை வேற்றுமை இருந்தாலும், தமிழர் வீரத்திற்காகவே இன்றும் ஏறுதழுவுதல் நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

ஏறுதழுவுதல் எனும் பழந்தமிழர் விளையாட்டு இன்றுவரை தொன்று தொட்டு வருவதை அறிய முடிகிறது. ஏறுதழுவுதல் குறித்த தொல்சான்று நம் வரலாற்றைப் பற்றி அறிய உதவுகிறது. சிலப்பதிகாரம் கூறும் ஏறுதழுவுதல் குறித்த செய்திகள் நம் தமிழரின் திருமண முறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள உதவுகிறது. கலித்தொகையில் ஏறுதழுவுதல் விழா என்பது ஒரு விளையாட்டைக் கூட விழாவாக நம் பழந்தமிழர்கள் எடுத்துச் சிறப்பாக நடத்தியுள்ளனர். தலைவனின் வீரம், காளைகளின் வீரம், வீரச்செயல் மற்றும் கூத்துவழி ஏறுதழுவுதல் குறித்த வரையறைகள் என்றிவைகள் எல்லாம் நம் தமிழர் பண்பாட்டுக்கு மேலும் வலுவூட்டுகின்றது. தற்கால ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டு என்ற பெயரில் நடந்து வருகின்றதைப் பார்க்க முடிகிறது. ஆகவே பழந்தமிழர் விளையாட்டுகளில் ஏறுதழுவுதலும் ஒன்று என்பது நம் தமிழரின் பண்பாட்டை உலகறிய செய்யும் உயர்ந்த விளையாட்டு என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ஒன்பதாம் வகுப்பு, தமிழ்நாடு பாடப்புத்தகம், ப.65.
2. சுப்பிரமணியன் ச.வே., சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவைக் காதை, பா.வரி.6-12.
3. சுப்பிரமணியன் ச.வே., கலித்தொகை, பா.வ.102: 11-16.
4. மேலது., பா.வ.101: 34-28.
5. வைரமுத்து, சந்தனதேவன் படம் பாடல் வரிகள்.
6. சுப்பிரமணியன் ச.வே., கலித்தொகை, பா.வ.102: 25-26.
7. மேலது., பா.வ. 101: 9-14.
8. மேலது., பா.வ. 103: 28-29.
9. மேலது., பா.வ. 101: 15-20.
10. மேலது., பா.வ. 104: 15-38.
11. மேலது., பா.வ. 103: 61-78.
12. வைரமுத்து, சந்தனதேவன் படம் பாடல் வரிகள்.

**துணை நூற்பட்டியல்**


1. ஒன்பதாம் வகுப்பு பாடப்புத்தகம், தமிழ்நாடு பாடப்புத்தக கழகம், சென்னை.
2. சுப்பிரமணியம் ச.வே., கலித்தொகை மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை, மூன்றாம் பதிப்பு செப்டம்பர் 2015.
3. சுப்பிரமணியம் ச.வே., ஐம்பெருங்காப்பியம் - சிலப்பதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை, முதற்பதிப்பு டிசம்பர் 2013.
4. வைரமுத்து, சந்தனதேவன் படம் பாடல் வரிகள்.